நகரம்

பிட்டாபுரத்தி அம்மன் கோவிலில் கொடியேற்றத்தை தொடர்ந்து கொடிமரத்திற்கு தீபாராதனை காட்டப்பட்ட காட்சி.

ஊர்க்காவல் தெய்வம் என்று அழைக்கப்படும்

டவுன் பிட்டாபுரத்தி அம்மன் கோவில் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கியது

திரளான பக்தர்கள் தரிசனம்

நெல்லை, ஜூன்.1–

நெல்லை டவுன் நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோவில் ஆனிப் பெருந்திருவிழா பிரசித்தி பெற்ற திருவிழாக்களில் ஒன்றாகும். இந்த திருவிழா 48 நாட்கள் நடைபெறும். இதற்கான பந்தல் கால் நடும் விழா கடந்த 16–ந்தேதி நடைபெற்றது.

திருவிழாவின் தொடக்க நிகழ்வாக நெல்லையப்பர் கோவில் வடக்கு திசையில் அமைந்துள்ள ஊர்க்காவல் தெய்வம் என்றழைக்கப்படக்கூடிய ஸ்ரீ பிட்டாபுரத்தி அம்மன் கோவில் திருவிழா இன்று காலை கொடியேற்றத்துடன் தொடங்கியது.

நெல்லையப்பர் ஆனிப் பெருந்திருவிழாவின் முதல் திருவிழாவான இந்த திருவிழா கொடியேற்றத்தை முன்னிட்டு நேற்றுமாலை அங்குரார்ப்பணம் மித்சங்கீரணம் ரக்ஷாபந்தனம் நடை பெற்றது.

இன்று அதிகாலை கோவில் நடை திறக்கப்பட்டு அம்பாளுக்கு அபிஷேகங்கள் நடைபெற்றது. தொடர்ந்து புண்யாக வாசனம், கும்ப பூஜைகள் நடைபெற்றதும் கொடிப் பட்டம் வீதி உலா நடை பெற்றது. தொடர்ந்து கொடிப்பட்டத்திற்கு பூஜைகள் நடைபெற்று இன்றுகாலைகொடியேற்றம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கொடிமரத்திற்கு மஞ்சள், பால் உள்ளிட்ட அபிஷேக திரவியங்களை கொண்டு சிறப்பு அபிஷேகமும், மகா தீபாராதனையும் நடை பெற்றது.

இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். பிட்டாபுரத்தி அம்மன் கோவில் திருவிழா இன்று தொடங்கி 10 நாட்கள் நடைபெறும்.

விழாவின் முக்கிய நிகழ்வாக 6–ம் திருநாள் அன்று சிம்மவாகனத்தில் அம்பாள் வீதி உலாவும், 9–ம் திருநாள் அன்று தேரோட்டமும், 10–ம் திருநாள் அன்று நெல்லையப்பர் கோவில் பொற்றாமரை குளத்தில் தீர்த்த வாரியும் நடைபெறுகிறது. விழா ஏற்பாடுகளை நெல்லையப்பர் கோவில் நிர்வாகத்தினர் மற்றும் உபயதாரர்கள் செய்திருந்தனர்.

பாளை மார்க்கெட் சாலையில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் தூய்மை பணி நடைபெற்றதை படத்தில் காணலாம்.

நாளை பள்ளிகள் திறப்பையொட்டி

நெல்லை ஸ்டேஷனரி கடைகளில் பெற்றோருடன் குவிந்த மாணவர்கள்

டோரா புஜ்ஜி, டோரேமான் உருவம் பொறித்த புத்தகப்பைகளுக்கு வரவேற்பு

நெல்லை, ஜூன்.1– தமிழகத்தில் அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் பொதுத்தேர்வு, முழு ஆண்டு தேர்வு நிறைவு பெற்று கோடை விடுமுறை விடப்பட்டது. இந்த பள்ளிகள் அனைத்தும் விடுமுறை முடிவடைந்த நிலையில், நாளை (திங்கட்கிழமை) திறக்கப்பட உள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த சில நாட்களாக பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்யப்பட்டு திறக்கப்படுவதற்கு தயார் நிலையில் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசு பள்ளிகளுக்கு வர்ணம் பூசுதல், சேதமடைந்த மேற்கூரைகளை சீரமைத்தல், சுவர் பூச்சுகள் சரி செய்தல் உள்ளிட்ட பணிகள் முடிவடைந்து விட்டது.

இதில், அரசு பள்ளி மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் மாணவ–மாணவிகளுக்கு பள்ளி திறக்கும் முதல் நாளிலேயே பாட புத்தகத்தோடு, நோட்டு களையும் அரசு சார்பில் இலவசமாக வழங்கப் படுகிறது.

இதற்கு தேவையான அனைத்து நோட்டு புத்தகங்களும் அந்தந்த பள்ளிக்கு பள்ளிக்கல்வித்துறை சார்பில் அனுப்பப்பட்டு விட்டது.

நெல்லை, தென்காசி மாவட்டங்களி லும் உள்ள அனைத்து பள்ளிகளிலும் புத்தகங்கள், காலனி, சீருடை, இலவச கல்வி உபகரண பொருட்கள் உள்ளிட்ட விநியோகம் செய்ய வேண்டிய அனைத்து பொருட்களும் வந்து சேர்ந்துவிட்டன.

இதனால் தனியார் பள்ளி மாணவர்கள் தங்களுக்கு தேவையான நோட்டு புத்தகங்களை வாங்க ஸ்டேஷனரி கடைகளில் அலைமோதி வருகின்றனர்.

இதேபோல் பள்ளிக்கு புத்தகங்களை வைத்து கொண்டு செல்வதற்கு தேவையான நோட்டுகள், கையேடுகள், பென்சில், காலனி, பேனா, ரெடிமேட் சீருடைகள் உள்ளிட்டவை வாங்கு வதற்கு பெற்றோ ருடன் கடைகளில் குவிந்து வருகின்றனர்.

இன்று விடுமுறை தினம் என்பதாலும் நாளை பள்ளிகள் திறக்கப்பட உள்ளதாலும் அனைத்து ஸ்டேஷனரி கடைகளிலும் கூட்டத்தை காண முடிந்தது. மேலும் சாப்பாடு பைகள், புத்தகப் பைகள், குடிநீர் பாட்டில் உள்ளிட்டவைகள் வாங்குவதற்கும் கடைகளில் கூட்டம் அதிகமாக இருந்தது. குழந்தைகள் விரும்பும் வகையில் டோரா புஜ்ஜி, டோரேமோன், ஸ்பைடர் மேன் உள்ளிட்ட உருவப் படங்கள் குறித்த புத்தகப் பைகள் உள்ளிட்டவைகளை வாங்குவதற்கு மாணவர்கள் மத்தியில் வரவேற்பு காணப்பட்டது.

அரசு பள்ளிகளில் போலீசார் முடி வெட்டுவது போல் மாணவர்களும் வெட்டிச் செல்ல வேண்டும். அநாகரீகமான முறையில் முடிகளை வெட்டக்கூடாது என்று கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையில் சலூன் கடைகளிலும் ஏராளமான மாணவர்கள் குவிந்திருந்ததை காண முடிந்தது.

பாவூர்சத்திரம் அருகே இன்று காலை பயங்கரம்:

வீடு புகுந்து பெண் கழுத்தறுத்து கொலை

மர்ம நபர் வெறிச்செயல்

தென்காசி, ஜூன்.1–

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே உள்ள பனையடிப்பட்டி காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் பரமசிவன். இவருக்கு உமா (வயது 37) என்ற மனைவி யும், 2 மகன்களும் உள்ள ளனர்.

சலூன் கடை

பாவூர்சத்திரத்தில் இருந்து கடையம் செல்லும் சாலையில் பரமசிவன் சலூன் கடை நடத்தி வருகிறார். இன்று காலை பரமசிவன் தூங்கி எழுந்ததும் அருகில் இருந்த டீக்கடைக்கு டீ குடிக்க சென்றார்.

அவரது 2 மகன்களும் நேற்று இரவில் ஊரின் அருகே கிராமத்தில் நடந்த கபடி போட்டியை பார்த்துவிட்டு வந்து வீட்டின் மேல் அறையில் தூங்கி கொண்டிருந்தனர்.

கழுத்தறுத்து கொலை

உமா மட்டும் கீழே உள்ள அறையில் தூங்கி கொண்டி ருந்துள்ளார். இதனை அறிந்து மர்ம நபர் ஒருவர் கத்தியுடன் வீட்டிற்குள் புகுந்து உமாவின் கழுத்தை அறுத்துக்கொலை செய்து விட்டு தப்பி சென்றுள்ளார்.

பரமசிவன் கடைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து பார்த்தபோது உமா ரத்த வெள்ளத்தில் கொலை செய்யப்பட்டு கிடந்ததை கண்டு அதிர்ச்சி அடைந் துள்ளார். உடனடியாக பாவூர்சத்திரம் போலீசா ருக்கு தகவல் அளித்த நிலையில் போலீசார் விரைந்து வந்து உமாவின் உடலைமீட்டுபிரேதபரிசோ தனைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

போலீசார் விசாரணை

மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவு செய்து உமாவை கொலை செய்த மர்ம நபர் யார்? எதற்காக கொலை செய்தார்? என்பது குறித்து விசா ரணை மேற்கொண்டனர். தகவல் அறிந்து போலீஸ் உயர் அதிகாரிகளும் சம்பவ இடத்தில் விசா ரணை மேற்கொண்டனர்.

கொலையாளி கொலை செய்ய பயன்படுத்திய கத்தியை வீட்டிலிருந்து சிறு தூரத்தில் இருந்த கிணற்றுக்குள் போட்டு சென்றுள்ளனர். அதனை போலீசார் கைப்பற்றி உள்ளனர். கொலை நடந்த வீடு மற்றும் அதன் முன் பகுதியில் தெருவிலும் ரத்தம் அதிகம் கிடந்தது. ஊர் மக்களும் அங்கு திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கொலை நடந்த வீடு முன்பு குவிந்திருந்த பொதுமக்கள்.

தூத்துக்குடியில் இரவில் துணிகரம்

அடுத்தடுத்து 3 வீடுகளில் கைவரிசை காட்டிய கொள்ளையர்கள்

லாக்கரில் இருந்த ரூ.10 லட்சம் நகை, பணம் தப்பியது

தூத்துக்குடி, ஜூன். 1–

தூத்துக்குடி புறநகர் பகுதியான முத்தையாபுரம் அய்யன்கோவில் தெருவில் நேற்று இரவில் மர்ம நபர்கள் புகுந்தனர்.

அவர்கள் அங்கிருந்த வீட்டிற்குள் புகுந்து திருட்டு முயற்சி செய்தபோது வீட்டில் ஆள் இருந்ததால் தப்பி ஓடிவிட்டனர்.

பின்பு ஜே.எஸ். நகர் 1–வது தெருவில் முத்துசாமி என்பவர் வீட்டிற்குள் மர்ம நபர்கள் நுழைந்துள்ளனர்.

வீட்டின் உரிமையாளர் கோவில் கொடை விழாவிற்கு தனது சொந்த ஊரான புதுக்கோட்டை சென்றதால் அதனை வாய்ப்பாக பயன்படுத்தி வீட்டில் இருந்த கம்மல், கொலுசு, பணம் ரூ. 2 ஆயிரம் மற்றும் பொருட் களை திருடிச் சென்றனர்.

அவரது வீட்டில் லாக்கர் இருந்த நிலையில் அதில் அவர் வைத்திருந்த ரூ.10 லட்சம் மதிப்புள்ள 15 பவுன் தங்கநகை மற்றும் ரூ.5 லட்சம் தப்பியது. இதனிடையே மர்ம நபர்கள் அவர் வீட்டுக்குள் புகுந்த காட்சிகள் அங்கிருந்த சி.சி.டி.வி. காமிராக்களில் பதிவாகியுள்ளது.

தொடர்ந்து திருட்டில் ஈடுபட்டவர்கள் ஜே.எஸ். நகர் 5–வது தெருவில் மாடசாமி என்பவர் வீட்டின் முன்பு நிறுத்தி இருந்த மோட்டார் சைக்கிளை திருடி செல்வதும் சி.சி.டி.வி. காமிராக்களில் பதிவாகி உள்ளது. முத்தையாபுரம் பகுதியில் இரவு நேரத்தில் தொடர்ச்சியாக 3 இடங்களில் துணிகரமாக வீடு புகுந்து நடைபெற்ற இந்த திருட்டு சம்பவங்கள் குறித்து முத்தையாபுரம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே முத்தையா புரம் பகுதியில் உப்பளங்கள், கடைகளில் நடைபெற்ற ஏராளமான திருட்டு மற்றும் கொள்ளை சம்பவ வழக்குகளில் இதுவரை மர்ம நபர்கள் சிக்கவில்லை.

இந்நிலையில் தற்போது ஒரே நாள் இரவில் தொடர்ச்சியாக 3 வீடுகளில் துணிகரமாக நடந்த கொள்ளை சம்பவங்களால் மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

தோரணமலை முருகன் கோவிலில் 27 நட்சத்திரங்களுக்கான மரங்களுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றபோது எடுத்தபடம்.

தோரணமலை முருகன் கோவிலில்

மாணவர்கள் கல்வியில் சிறக்க வேண்டி சிறப்பு பூஜை

கடையம், ஜூன்.1–

தென்காசி மாவட்டம் கடையம் அருகே அமைந் துள்ளது தோரணமலை முருகன் கோவில். இக்கோவில் சித்தர்களால் வழிபடப்பட்ட புராதான மும், பெருமையும் உடைய கோவிலாகும்.

இக்கோவிலில் கோடை விடுமுறையையொட்டி ஞாயிற்றுக்கிழமைகளில் பாரம்பரிய விளையாட் டுக்கள் மற்றும் மாணவர் களுக்கான அறிவுத்திறன் போட்டிகள் நடத்துவது வழக்கம் .

இதைத்தொடர்ந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) மாணவர்கள் கல்வியில் சிறக்க வேண்டி ஸ்ரீ மகா வித்யா பூஜை நடைபெற்றது.

முதலில் அடிவாரத்தில் உள்ள விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் செய்யப் பட்டு பின்பு விநாயகர் கோவில் பின்புறம் உள்ள அரச மரத்திற்கும், வேப்ப மரத்திற்கும் விருச்ச ராஜ பூஜை நடைபெற்றது.

தொடர்ந்து கோவிலில் நடப்பட்டுள்ள 27 நட்சத்தி ரங்களுக்கான மரங்களுக்கு சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் திரளான மாணவ–மாணவிகளும், பக்தர்களும் கலந்து கொண்டனர்.

பூஜையில் கலந்து கொண்ட அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப் பட்டது. மேலும் காலை, மதியம் அன்னதானம் நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் பரம் பரை அறங்கா வலர் செண்பக ராமன் செய்தி ருந்தார்.

இருசக்கர வாகனங்கள் நேருக்குநேர் மோதல்; மூதாட்டி பலி

குரும்பூர், ஜூன். 1–

காயல்பட்டினம் அழகாபுரியை சேர்ந்த கணேசன் மனைவி கவிதா (வயது 64). தனது உறவினர் செல்வராஜ் மனைவி மோகனாதேவி என்பவருடன் அவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் ஏரல் ஆற்றில் குளிக்கச் சென்று வீட்டிற்கு திரும்பி வந்து கொண்டிருந்தார்.

குரும்பூர் அடுத்த நல்லூர் விலக்கு அருகில் வரும் போது எதிரே ஆறுமுகநேரி மேலசண்முகபுரத்தை சேர்ந்த பாண்டியன் மகன் கார்த்திக் (21) என்பவர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் நேருக்கு நேர் மோதியது. இதில் 2 பெண்களும் ரோட்டில் தூக்கி வீசப்பட்டனர். உடனடியாக 2 பேரையும் மீட்டு ஆம்புலன்சில் ஏற்றி திருச்செந்தூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். பின்னர் கவிதாவை மேல் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர். அப்போது அவர் செல்லும் வழியிலேயே பலியானார்.

நெல்லை மாநகராட்சி

21-வது வார்டு பகுதிகளில் மேயர் ஆய்வு

நெல்லை,ஜூன்.1–

நெல்லை மாநகராட்சிக்கு உட்பட்ட 21–வது வார்டு பேட்டை திரிபுர சுந்தரி அம்மன் கோவில் தெரு, ஊரணி சாஸ்தா கோவிலை சுற்றி சாலை அமைத்தல், கருங்காடு சாலை சிவன் கோவில் முன்பு பொது தண்ணீர் குழாய் அமைத்தல் போன்ற பணிகளை மேயர் ராமகிருஷ்ணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து பேட்டை ராணி அண்ணா மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் பயன்பெறும் வகையில் விளையாட்டு மைதானம் அமையும் இடத்தையும் மேயர் ராமகிருஷ்ணன் நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது நடைபெறும் அனைத்து பணிகளையும் துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். ஆய்வின்போது மாநகராட்சி கவுன்சிலர்கள் ராஜேஸ்வரி, மன்சூர், மாரியப்பன், தி.மு.க. மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி, வட்ட பிரதிநிதி ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

3–ந்தேதி மதியம் 3 மணியளவில்

கனிமொழி எம்.பி. சென்னை திரும்புகிறார்

ஜம்மு–காஷ்மீரின் பகல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தானின் தீவிரவாதத்தை உலகுக்கு அம்பலப்படுத்த சர்வதேச நாடுகளுக்கு 7 இந்திய பிரதிநிதிகள் குழு சென்று உள்ளது. இதில் தி.மு.க. துணைப் பொதுச் செய லாளர் கனிமொழி எம்.பி.யும் இடம் பெற்றுள்ளார். அவர் மாஸ்கோ, கிரீஸ், சுலோவேனியா, லாத்வியா நாடுகளுக்கு சென்று விட்டு இப்போது ஸ்பெயின் நாட் டில் பிரதிநிதிகளை சந்தித்து வருகிறார். நாளையுடன் கனிமொழி எம்.பி.யின் வெளிநாட்டு பயணம் நிறைவடைகிறது.

இதைத் தொடர்ந்து துபாய் வழியாக வரும் கனிமொழி எம்.பி. 3–ந்தேதி மதியம் 3 மணியளவில் சென்னை விமான நிலையம் வந்தடைகிறார்.

அருள்மிகு பூவனநாதசுவாமி திருக்கோயில்

கோவில்பட்டி 628 501

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இத்திருக்கோயிலுக்கு 1435ம் பசலிக்கு (01.07.2025 முதல் 30.06.2026 முடிய) தேவையான படித்தர புஷ்பம் மற்றும் நெய்தீபம் தயாரிக்க தேவையான மண் அகல் விளக்குகள் ஆகியன சப்ளை செய்வதற்கு 13.06.2025ம் தேதி 3.30 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 5.00 மணிக்கு வரப்பெற்ற ஒப்பந்ததாரர்கள், திருக்கோயில் செயல் அலுவலர், அறங்காவலர் குழுவினர் மற்றும் கோவில்பட்டி சரக இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் திறந்து முடிவு செய்யப்படும். விருப்பமுள்ள நபர்கள் ஒப்பந்தப்புள்ளி திறப்பில் கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கலாம். இதர ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.

கி.வெள்ளைச்சாமி
செயல் அலுவலர்
நாள்.30.05.2025

பி.எஸ்.ஏ.ராஜகுரு
தலைவர்,
அறங்காவலர் குழு

அறங்காவலர்கள்: **பூ.சு.திருப்பதி ராஜா, சுபாஷ்,கை.சண்முகராஜ், செ.ரவீந்திரன், தி.நிறுத்தியலட்சுமி**

தாம்பரம் மாநகராட்சி

ந.க.எண்: 340/2025/இ1(மு-4) — மாநில ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு — நாள்: 20.05.2025

(ஒரு மற்றும் இரண்டு உறை முறை)

அ) பொது நிதி / குடிநீர் நிதி 2025-26 -ன் கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளுதல்

வ. எண்	பணியின் பெயர்
1	பாதாள சாக்கடை திட்டப்பணிக்கு ஜெட்ராடு வாகனம், கரடுகளை அகற்றும் வாகனம் இயக்கும் பணி கழிவுநீர் குழாயில் உள்ள அடைப்பு நீக்கும் பணிக்கு வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்தல் (12 மாதங்கள்)
2	கன்னடப்பாளையம் குப்பை கிடங்கில் உள்ள குப்பைகளை ஆப்பழ் குப்பை கிடங்கிற்கு டாரஸ் வாகனம் மூலம் கொண்டு செல்லுதல் மற்றும் வெளிகொணர்வு அடிப்படையில் பொக்லைன் இயக்குபவர் சப்ளை செய்தல் பணி

மேற்கண்ட பணிகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

2. பணியின் குறைந்தபட்ச மதிப்பு ரூ. 53.20 இலட்சம், அதிகபட்ச மதிப்பு ரூ. 60.00 இலட்சம் ஆகும்.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் 02.06.2025 முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட (https://tntenders.gov.in) வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: 12.06.2025 அன்று மாலை 3.00 மணி.
5. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள்: 12.06.2025 அன்று மாலை 3.30 மணி.
6. பணியின் மதிப்பீட்டு தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விவரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

ஆணையாளர்,
தாம்பரம் மாநகராட்சி

செ.ம.தொ.இ/2710/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில்

திருமோகூர், மதுரை கிழக்கு வட்டம், மதுரை மாவட்டம்

மின்னணு முறை ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இரண்டாம் அழைப்பு)

ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண்.2 / நாள் – 31.05.2025

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், திருமோகூர், அருள்மிகு காளமேகப் பெருமாள் திருக்கோயில், செயல் அலுவலர் அவர்களால் கிழக்கணும் விபரப்படியான பணிக்கு ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 02.06.2025 முதல் 18.06.2025 வரை தமிழ்நாடு அரசின் அதிகாரப்பூர்வ ஒப்பந்தப்புள்ளி இணையதளமான www.tenders.tn.gov.in மூலம் கட்டணமில்லாமல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் 18.06.2025 அன்று பிற்பகல் 3.00 மணி வரை சமர்ப்பிக்கலாம். தெரப்பட்ட இணையதள ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.2025 அன்று பிற்பகல் 3.30 மணிக்கு www.tenders.tn.gov.in வலைதளத்தில் திறக்கப்படும். முக்கிய விபரங்கள் மற்றும் திருத்திய விபரங்களை www.tenders.tn.gov.in இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

வ. எண்.	பணியின் பெயர்	ஒப்பந்தத் தொகை (Including GST)	முன் வைப்புத் தொகை ரூ.	பணி முடிக்க வேண்டிய காலம்	ஒப்பந்ததாரர் தகுதி
1.	ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருக்கோவில் திருப்பணி– திருக்கோயிலில் உள்ள ஐந்து நிலை இராஜகோபுரம், அனைத்து விமானங்களும் மராமத்து செய்து புனரமைத்தல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள், அன்னதான மண்டபம், காலணி பாதுகாப்பு அறை (ம) பொருட்கள் பாதுகாப்பு அறை கட்டுதல் பணி, மேபார்பிளாக் தளம் அமைத்தல் பணி	2,67,68,492/	1,44,000/	12 மாதங்கள்	தமிழ்நாடு அரசுத்துறை, இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற, நடப்பிலுள்ள தகுதி வாய்ந்த திருக்கோயில் திருப்பணிகளில் அனுபவம் வாய்ந்த ஸ்தபதி / சிற்பிகள் கருங்கல், (அல்லது) தமிழ்நாடு அரசுத்துறை / அரசு நிறுவனங்களில் பதிவு பெற நடப்பில் உள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் இந்து சமய அறநிலையத்துறையில் பதிவு பெற்ற ஸ்தபதி / சிற்பி கருங்கல் ஒப்படுல் வழதத்துடன் கலந்து கொள்ளலாம்.

திருமதி. து.வளர்மதி, பி.எஸ்.சி., தக்கார் / உதவி ஆணையர்

செ.ம.தொ.இ/2722/ஒப்பந்தப்புள்ளி/2025

திருமதி. த.மாலதி, பி.எஸ்.சி., செயல் அலுவலர்

செண்பக ராமன் செய்தி ருந்தார்.

விழளம் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சூலக்கரை, விருதுநகர் CIN No.: L17111TN1946PLC003270 www.vtmill.com

31.03.2025 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் முழுஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை| Ind AS படி

(ரூபாய் லட்சங்களில்)

வ. எண்.	விவரங்கள்	31.03.2025 அன்று முடிந்த காலாண்டு கணக்கு (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2024 அன்று முடிந்த காலாண்டு கணக்கு (தணிக்கை செய்யப்படாதது)	செற்ற 31.03.2024 அன்று முடிந்த காலாண்டு கணக்கு (தணிக்கை செய்யப்பட்டது)	31.03.2025 அன்று முடிந்த ஆண்டு கணக்கு (தணிக்கை செய்யப்பட்டது)	செற்ற 31.03.2024 அன்று முடிந்த ஆண்டு கணக்கு (தணிக்கை செய்யப்பட்டது)
1	தொழிலில் இருந்து மொத்த வருமானம்	10,959.05	10,403.38	6,528.00	34,935.19	21,527.63
2	அசாதாரண விஷயங்களுக்கு முன்பு லாபம் (வரிக்கு முன்)	1,586.05	2,465.19	374.83	6,051.55	2,346.10
3	அசாதாரண விஷயங்களுக்கு பின்பு லாபம் (வரிக்கு முன்)	1,586.05	2,465.19	374.83	6,051.55	2,346.10
4	அசாதாரண விஷயங்களுக்கு பின்பு லாபம் (வரிக்கு பின்)	1,217.19	1,819.89	352.47	4,537.41	1,829.19
5	இதர மொத்த வருமானம் (வரி நிகர)	(70.70)	91.18	25.30	206.19	332.94
6	மொத்த விரிவான வருமானம் மற்றும் பிற விரிவான வருமானம் (வரிக்குப் பின்)	1,146.49	1,911.07	377.77	4,743.60	2,162.13
7	செலுத்தப்பட்ட சம பங்கு மூலதனம்	402.28	402.28	402.28	402.28	402.28
8	ரிசர்வுகள், மறு ஆய்வு ரிசர்வுகள் நீங்கலாக	30,240.15	29,596.51	25,898.83	30,240.15	25,898.83
9	அசாதாரண விஷயங்களுக்கு முன் ஒரு பங்கு பத்திரத்திற்கு (ரூபாயில்)					
	EPS பேசிக்	3.03	4.52	0.88	11.28	4.55
	EPS டைலூட்டட்	3.03	4.52	0.88	11.28	4.55

குறிப்பு: (1) மேற்குறிப்பிட்ட 31.03.2025 வரை முடிவடைந்த காலாண்டு மற்றும் முழு ஆண்டு நிதிநிலை அறிக்கை தணிக்கை குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டு 29.05.2025 அன்று நடைபெற்ற நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.தணிக்கையாளர்கள் ரிப்போர்ட்டில் தங்களது மாற்றமில்லாத கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

(2) மேற்கூறப்பட்ட காலாண்டு மற்றும் முழு ஆண்டு முடிவுகள் (தணிக்கை செய்யப்பட்டது) SEBI (LODR) 2015 விதிகள் 33ன் படி அமைந்து பங்கு பரிவர்த்தனை மையத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. காலாண்டு மற்றும் முழு ஆண்டு முடிவுகளின் முழு விரிவாக்கம் BSE-ன் இணையதள முகவரி www.bseindia.com மற்றும் கம்பெனி இணையதள முகவரி www.vtmill.com-யிலும் காணலாம்.

இடம்: கப்பலூர், மதுரை
தேதி: 29.05.2025

விழளம் லிமிடெட்டிற்காக,
க.தியாகராசன்
தலைவர் & நிர்வாக இயக்குநர்